# கடுகு KADUKU

## Christ Mission Centre - Kudaththanai



அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் தலைவர்

அருட் கலாநிதி **S.** ஜெயநேசன் அவர்கள்

***" Our Church Should be vibrant "***

கிளை 04 இலை 07


### ஆசிரியர்

ராஜன் றொகான்
BTH, Dip-in-Theo, Dip in CE

### துணை ஆசிரியர்

K. கீர்த்தனா

### முன்னெடுப்பு குழு

தங்க. ஐங்கரன்
நவ. நதியா
வே. கோசலா
க. காஞ்சனா
சிறி. யூட் வினோதன்
சி. நிலோஜன்
இரா. மயூரன்


### இலக்கு!

நாம் கடவுள்
ஏனெனில்
இருக்கும் வரை
வளமாவோம்
இறந்த பின்னர்
பசளையாவோம்
இன்னுமோர் உயிரை
வாழ வைப்பதினால்
நாம்...........

பாரதிராகன்




கிறிஸ்து நற்தூதுப் பணியகம்
அமெரிக்கன் இலங்கை மிசன்
திருச்சபை
குடத்தனை


டிசம்பர் – 15,2007

வணக்கம்,

அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய என் இனிய வாசகர்களே!
உங்கள் அனைவருக்கும் எனது இயேசுவின் பிறப்பு, புதுவருட பண்டிகைகளின் வாழ்த்துக்கள்.

இயேசுவைப் போல உண்மைக்காக வாழும் வேகம், துயரத்தை பொறுத்துக் கொள்ளும் தன்மை என்பன புதுவருடத்திலும் இருப்பதாக.

நிறைவுக்கு உள்ளாகும் இவ் வருடத்தில் ஆக்கிரமிப்புக்கள், விலை உயர்வுகள், ஆள்க்கடத்தல்கள், குண்டு வெடிப்புகள் என்னும் பல சவால்கள், பல இழப்புக்கள் எம்மையும் எமது செயற்பாடுகளையும், உணர்வுகளையும் சேதப்படுத்திக் கொண்டு இருந்த போதும் செயல் இழக்கச் செய்து கொண்டிருந்த போதும் இப்பாதகங்களைக் கண்டு பல இலட்சம் மனிதர்கள் அமைதி பண்டங்களாக ஒரே ஒரு பெரும் மகிழ்ச்சி என்னவென்றால் மனிதனை நேசிக்கின்ற முழு மானிட விடிவுக்காகவும், வளர்ச்சிக்காகவும் வாழுகின்ற ஒரு சில மனிதர்களை இது மனிதம் இன்னும் மரணிக்கவில்லை என்பதுடன் எத்தனை வகையான, வலுவான தீமைகள் உருவெடுத்தாலும் இறைமகன் இயேசுவின் பிறப்பின் உடைய இலக்கை தெளிவாக புரிந்து கொண்ட ஒரு மனிதன் இருக்கும் வரை மனிதம் ஒருபோதும் சாகாது.

நன்றி

-ஆசிரியர்-
கடுகு

தொடர்பு
0776997858



# கற்றது தமிழ் (தமிழ் M.A)

## திரைப்பட விமர்சனம் - கடுகு

மல்குஸ் என்னும் சமூக விஞ்ஞானியின் கருத்தியலின்படி சமூக மாற்றத்தை தீர்மானிக்கும் இரண்டு காரணிகள்,

1 - கல்வி, 2 - பொருளாதாரம் என்பனவாகும். இதனடிப்படையிலே கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம் என்னும் இரண்டு பெரும் கோட்பாடுகள் உருப்பெற்றன.

இதில் ஒன்று கல்வி. கல்வி சமூக முன்னேற்றத்திற்கு மானுட வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தது. கல்வியே உலகத்திற்கு உரு கொடுத்தது. கல்வியே உலகிற்கு உலகை அறிமுகம் செய்தது.

இவ்வகையான மாண்புமிக்க கல்வியே இன்று சமூக வீழ்ச்சிக்கும் சமூகத்திலே சில பாதகமான சக்திகள் உருவாகுவதற்குக் காரணமாக அமைகின்றது. இன்றைய கல்வித் திட்டம் ஒரு சாராரை உன்னத இடத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் இன்னும் ஒரு பகுதியினரை மிககேவலமாக சிதைத்துக் கொண்டிருப்பதை உணர்வுடனும், தெளிவுடனும் எடுத்துக்கூறும் பாராட்டுக்குரிய தென்னிந்திய தமிழ் திரைப்படமே **"கற்றது தமிழ்"** (தமிழ் M.A)

இயக்குநர் "ராம்" என்பவரின் முதலாவது முயற்சியே மூக்கில் விரலை வைக்குமளவுக்கு வியப்பாக உள்ளது. சிந்திக்கத் தெரிந்த ரசிகர்கள் இப்படத்தை நிச்சயம் பாராட்டுவார்கள்.

இன்று வெளிவருகின்ற பல தமிழ் திரைப்படங்கள் கவர்ச்சியாலும், அழகினாலும், ஆபாசங்களினாலும், ரவுடித்தனத்தாலும் வரும் சாதனையையே கதையாகக் கொண்டுள்ளது.

பணத்துக்காகவும், சிறந்த வாழ்வுக் காகவும் ஆசை உணர்வுக்காகவும் உருவாகும் காதல்கள் ஏறுவரிசையில் இன்று. ஆனால் கற்றது தமிழ் மீண்டும் ஒருமுறை தெய்வீக காதல் என்றால் என்ன என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது. பொறுப்பான பதவிகளில் இருக்கும் உத்தியோகத்தர்கள் சுயநல அலட்சிய போக்கினால் எவ்வளவு திறமையான மானுட சமூகம் ஊனப்படுத்தப்படுகின்றது என்பதே **"கற்றது தமிழ்"** பாதிக்கப்பட்ட வளமான இளைஞர்களுக்கு இத்திரைப்படம் ஓர் ஆறுதலாக இருக்கும். ஏனெனில் தமது பாதிப்பை இப்படம் உலகிற்குச் சொல்லியுள்ளது.

தன்மானத்துடனும், இலட்சியத் துடனும் வாழ விரும்பும் இளையோருக்கு இவ்வுலகம் கொடுக்கும் உன்னத பரிசு தற்கொலையைத் தவிர வேறு என்ன?

நடிக்கத் தெரிந்த ஓர் இளம் நடிகர் என்பதை நிரூபித்துவிட்டார் ஜீவா! யுவன் சங்கர்ராஜாவின் இசை அசத்தலோ அசத்தல்.

முடிவுக்கட்டம் நீண்டு விட்டது. மிகவிறுவிறுப்பான இயக்கத்தை முடிவுப் பகுதியில் இயக்குனர் தவறவிட்டுவிட்டார்!

இத்திரைப்படத்தைப் பார்க்கும் போது இதிகாசங்கள், புராணங்கள் கடவுளைப் பற்றிய தீர்க்கதரிசன நூல்கள், திருமறை என்பன ஞாபகத்திற்கு வந்தது.

ஏனெனில் இன்று கடவுள் மனிதனாக வாழ்ந்தால் அவர் நிச்சயமாக கற்றது தமிழ் படத்தில் நடமாடும் பிரபாகரைப் போல தான் இருப்பார்.

**- கடுகு -**

(மிக நீண்ட நாட்களுக்குப் பின் நல்ல திரைப்படம் பார்த்த திருப்தி)

# யாழ்ப்பாணத்தவர் வாழ்வில் ஒப்பாரி

இன்றைய தமிழ் மக்களின் வாழ்வில் ஒப்பாரி முக்கிய பங்கினை வகிக்கின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தவர் வாழ்வில் ஒப்பாரி முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இதனைத் தெளிவாக நோக்குகின்ற போது கிரியைகள் இரு வகைப்படும். ஒன்று பூர்வக் கிரியை மற்றையது அபரக்கிரியை ஆகும். இந்த வகையில் பூர்வக்கிரியை என்பது திருமண வைபவங்களின் போது இடம்பெறும் கிரியை முறையினைக் குறித்து நிற்கின்றது. அபரக்கிரியை என்பது ஒருவர் இறந்த பின்னர் இடம்பெறும் கிரியைகளைக் குறித்து நிற்கின்றது. இத்தகைய அபரக்கிரியையின் போதே ஒப்பாரிப் பாடல்களின் பயில்நிலையினைத் தரிசித்துக் கொள்ள முடிகின்றது. இருந்த போதிலும் இவை இடத்துக்கு இடம் வெவ்வேறு கிராமப்புறங்களுக்கு இடையே வேறுபடுகின்றது. நாம் பொதுவாக யாழ்ப்பாணத்தவர் வாழ்வின் அடிப்படையில் நோக்குவோம்.

தொன்றுதொட்டு வருகின்ற ஒப்பாரிப் பாடல்கள் எமது யாழ்ப்பாணத்தவர்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றது. அதாவது ஒருவர் இறந்த பின் தமது கவலைகளைப் பாடல் மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதாகவே ஒப்பாரிப் பாடல் அமைகின்றது. கூடுதலாகப் பெண்கள் குறிப்பிட்ட அளவாக ஒன்று கூடி ஒருவரை ஒருவர் தோள்களில் கைகோர்த்து ஒப்பாரி சொல்லி அழுவார்கள். வேறு வகையாக நெஞ்சிலே இரண்டு கைகளாலும் குத்தி அழுவார்கள். இவை கிராமங்களினூடாக வேறுபடுவதனையும் அவதானிக்க முடிகின்றது. பொதுவாக நகரப் பகுதிகளை விட கிராமப் புறங்களிலே இவை அதிகளவாகக் காணப்படுகின்றது. மேலும் ஒருவர் வருவதனைக் கண்டவுடன் இன்னொருவர் சென்று அவரைத் தழுவி அழும்போது அவர்கள் தம்மிடம் உள்ள கவலைகளைப் பாடலாகச் சொல்லி அழுவார்கள். சிலர் இறந்தவர் அவருக்கு என்ன முறையில் உறவினரோ அல்லது எந்த வகையில் தொடர்பு வைத்திருக்கின்றாரோ அந்த உறவு முறையைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி ஒப்பாரிப்பாடலின் பயனையும் அதன் இடத்தினையும் தெளிவுபடுத்துகின்றனர். உதாரணமாக,

**"மார் மேலும் தோள் மேலும் - உன்னை**
**மகிழ்வோடு வளர்த்தேனடா**
**கார் மேக நிறத்தன் நீயடா - என்னை**
**கதி கலங்க வைத்தாயடா"**




என்ற பாடலடியினைக் கூறமுடியும். இத் தகைய பாடலானது தாயானவள் மகன் இறந்தவுடன் மகன் மேல் வைத்திருக்கும்

பாசத்தை ஒப்பாரிப் பாடலாக வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

**"என் ஆசை மருமகனே - உனக்கு**
**பாக்குச் சொருக்கியதோ!"**

மேற்படி பாடலானது மாமியார் மருமகனுக்குத் துன்பம் வந்த வேளை ஒப்பாரியாகப் பாடித் தனது கவலையினை வெளிப்படுத்துகின்றாள்.

ஒப்பாரிப் பாடலானது கலையில் ஒரு வகையாகவே காணப்படுகின்றது. இசையுடன் ஒப்பாரியானது பாடப்படுகின்றது. இவ்வாறு பாடப்படும் போது ஒரு வகையான இசையுடன் கூடிய கலையின் ஒரு சிறு பகுதிக்குள் உட்பட்டவாறே காணப்படுகின்றது. உண்மையில் வயது முதிர்ந்தவர்களே கூடுதலாக ஒப்பாரிப் பாடலினை நீளமாக ஆரோகண, அவரோகண இசையுடனும் பாடுகின்றார்கள். இவ்வாறாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 1988ல் நாட்டார்பாடல் என்ற ஒலிப்பேழையை வெளியிட்டது. இவ் ஒலிப்பேழையின் ஒரு பகுதியாக ஒப்பாரிப்பாடல் என்ற தலைப்பையும் உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது. இத்தகைய ஒப்பாரிப்பாடல்கள் சில வேளையில் போட்டிக்குப் பாடுவதாகவும் காணப்படுகின்றது.

இவ்வகையான ஒப்பாரிப்பாடல்கள் பழைய நாடகங்களிலும் காணப்படுகின்றன. உதாரணமாக அரிச்சந்திரன் நாடகத்திலே "லோகிதாஸன்" பாம்பு தீண்டி இறந்த போது அவன் இறந்த செய்தியைக் கேட்ட சந்திரமதி ஓடோடிச் சென்று ஒப்பாரிப் பாடல் பாடி அழுகின்றாள். இதனூடாக நாடகத்தில் இடம்பிடித்து யாழ்ப்பாண மக்கள் மத்தியில் மையங்கொள்கின்றது.

எனவே தொகுத்து நோக்கும் போது ஒப்பாரி பாடும் பெண்கள் இறந்தபின் உடல் எரிப்பதற்காக மயானத்திற்குப் கொண்டு செல்லும் வரையும்தான் அழுவார்கள். பின்னர் அவர்கள் அங்கு செல்வதில்லை. இத்தகைய ஒப்பாரிப்பாடலானது சாவீடுகளில் மட்டும் அல்லாது அதாவது எட்டாம் நாள், அந்தியேட்டி, மாசியம், திவசம் ஆகிய தினங்களிலும் ஒப்பாரிப் பாடல் பாடி அழுவார்கள் இவ்வாறு பாடப்படுகின்ற ஒப்பாரிப் பாடல்கள் யாழ்ப்பாண மக்களிடையே ஆட்சி கொண்டிருப்பதனைக் காணலாம். ஒப்பாரிப்பாடல்கள் தமிழ் மக்களிடையே காணப்படும் பண்டைய மரபு ஆகும். இத்தகைய மரபு தமிழ் மக்கள் அதிகம் நிறைந்துள்ள யாழ்ப்பாணத்தில் தனக்கென தனியான இடத்தினை வகிக்கின்றது.

நன்றி

"பயனைக் கருதிக் கருமம் செய்பவனாக இராதே"

**T. ஐங்கரன் (இந்துமன்)**
**மாளிகைத்திடல்**

## நானே ஒரு போதிமரம்

என் உணர்வுகள்
சுதந்திரமாய் வெளிவரட்டும்
அவை வெளியுலகிற்கும்
வேஷம் போட்டுக் கொண்டு
திரியும் சில புல்லுருவிகளுக்கும்
தெரியட்டும்.
அல்லலுறும் போது
இம்மைப் படுத்தியவர்களுக்கு
எப்போது நான் எப்படி
உறவாக முடியும்........?
என் ஆற்றலால் என்னை
நானே உருவாக்கிக்
கொண்டிருக்கிறேன்.
அதனால் உலகிற்கு
அறிமுகமாகிக் கொண்டு
இருக்கிறேன்.
என் இலட்சியம்
குறிக்கோள் நிறைவேற
நான் என் வழியில்
செல்கிறேன்
தடைகள் எதுவும்
என்னை அடிமை
ஆக்கிடாது.......
ஏனெனில்
நான் இன்னும் நானாகவே
இருக்கிறேன்.

வே. கோசலா
அம்பன்

## நினைவுகள் எனும் ............

நினைவுகள் என்னும்
நச்சுக் கனிகள்
என் உள்ளே நுழைந்து
நிதம் என் இயக்கத்தை
நாசப்படுத்துகின்றன.

என்னையும் என் உணர்வுகளையும்
மிக ஆழமாகத் தோண்டி
சுரங்கமமைத்துச்
சுற்றிச் சுற்றித்
தேடியும்?

நிஜமாகச் சொல்கிறேன்
நினைவுகளைத் தவிர
நிரந்தரமானதென
எதுவுமில்லையே
என்னிடம்!
மரணந்தான்
மனிதனுக்கு உண்மையான
வாழ்வு!
என்னும் உண்மையை
இப்போது கற்றுக் கொண்டேன்
“நினைவுகள்” எனும்
பேராசானிடமிருந்து

உள நெருக்கீட்டுக்கும்
மன குழப்பத்திற்கும்
உருவாக்க ஊற்றே
நினைவுகள் தான்.

ஆனால்
என்னைப் பொறுத்தவரையில்
என் வாழ்வின் மையமும்
ஏன்?
என் இயக்கத்திற்கு
காரணமாக இருக்கும்
இறை சக்தியே அந்த
நினைவுகள் தாம்!

– வாழை ராறோ –

# மூக்குத் துவாரங்கள் மூழ்கு மட்டும்

நாம் வாழும் சூழல் தொடர்பான அறிவினைப் பெற்றிருக்க வேண்டிய காலகட்டத்திற்குள் நாம் இன்று நுழைந்துள்ளோம் ஏனெனில் இன்றைய விஞ்ஞான உலகினுள், சூழல் இயற்கை என்பவற்றின் நலமானது சவாலாகக் காணப்படுகிறது.

இன்று சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் பேறாக உலகமெங்கிலும் உள்ள சூழலியலாளர்கள் அமெரிக்க முற்குடிகளினதும் பழங்குடிகளினதும் நம்பிக்கைகளின்பால் தமது கவனத்தைத் திருப்பியுள்ளார்கள். "நீ என்னைக் கேட்கிறாய் இந்த நிலத்தை உழச் சொல்லி நான் எப்படி ஒரு கத்தியை எடுத்து எனது தாயின் மார்பைக் கீறமுடியும். நீ எனக்குச் சொல்கிறாய் புல்லை அறுத்து தீவனமாக விற்று வெள்ளை மனிதனைப் போல் செல்வந்தனாக என்று. நான் எப்படி எனது தாயின் குரல்வளையை அறுத்து எடுக்க முடியும்" என்று "ஸ்மொசல்லர்" என்ற செவ்விந்திய இனக் குழுத்தலைவனின் வார்த்தைகளில் இன்றைய நிலையின் தாற்பரிய அறிவுடமையைக் காணமுடிகிறது.

"இது தான் நாங்கள் அறிந்தது இந்தப் பூமி மனிதனுக்குரியதல்ல. மனிதன் தான் பூமிக்குரியவன் குருதி ஒரு குடும்பத்தைப் பிணைப்பது போல எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன" என்பது இன்னொரு இனக்குழுத்தலைவனின் சீற்றத்தில் உண்மைச் செய்தி.

இவ்வாறாக இயற்றை தொடர்பான விழிப்புணர்ச்சி இன்று எமது பிரதேசத்தின் அவசியம். பொதுவாக நாம் இயற்கை வளங்களை வர்த்தக முதலாளித்துவ அடிப்படையில் இயக்குவதால் உற்பத்தியின் ஒரே மாதிரியையும் ஒரே வளத் தொகுதியில் ஒரேயொரு செயலையுமே. இலாபத்தின் பொருட்டாகக் கருத்தில் கொள்கிறோம். உதாரணமாக காடு, பகுத்தறிமுறைக் கட்டளைப் படிமத்தின்படி ஒரு மரக்கட்டையாக சுருங்கி விடுகிறது. இது மேலும் சுருங்கி காகிதத் தொழிலுக்கான செலுலோஸ் நார்க்குழம்பாக (Sellulose fibre putp) ஆகிவிடுகிறது. இவ்வாறாக இயற்கை வளங்களான வனம், நிலம், உயிர் வளம் என்பன சுரண்டப்பட்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் கையாளப்படுகிறது.

இவ்வாறான சூழலியல் நிலையில் எமது பிரதேசம் இயற்கை வளமான மணல் இருப்பு நிலையினைக் கருத்தில் கொண்டு நோக்குவோமாயின் அதனால் பல நன்மைகள் மனித சமூகத்திற்கு ஏற்பட்டும் அதனைப் பாதுகாக்காது சில விசமிகளுடன் இணைந்து அப்பிரதேச வாழ் மக்களும் அதனை வெறும் வர்த்தக ஏற்றுமதிப் பண்டமாகவும், பண்டமாற்றுப் பொருளாகவும் கருதி சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் மணற்காடு, பொற்பதி, குடத்தனை, அம்பன் போன்ற கிராமங்கள் இருந்ததற்கான ஆதாரச் சுவடுகள் இல்லாமல் போவதற்குரிய அபாயநிலை காணப்பட்டு வருகிறது. இதற்குச் சான்றாக சுனாமிப் பேரலைகளின் கரங்களினால் மணற்காடு, பொற்பதி ஆகிய கிராமங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டு இருக்கும் நிலையைக் கண்களுக்கூடாகக் காணமுடிகிறது.

இவ்வாறு தொடர்ந்து மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான செயல் மண்

அகழ்வு நீர் மட்டத்திற்கு நடைபெறுகிறது. கடல் 2km தூரத்தில் உள்ளது என்பதையாரும் கவனத்தில் கொள்ளவில்லை. நன்நீர், உவர்நீராகிறது. நீர் தேங்கி நின்று மனிதனை அழிக்கக்கூடிய பல நுண்ணுயிர்களைத் தோற்றுவித்து சூழலை மாசடையச் செய்கிறது. இம் மண் அகழ்வினால் கிடைக்கும் வருமானத்தில் எமது பிரதேசத்துக்கென எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பூமியில் எல்லாப் பாகங்களிலும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை சுரண்டுவது வழமைதான். ஆனால் இலங்கைத் திருநாட்டில் அபிவிருத்தி அடைந்துவரும் நகரங்கள், கிராமங்களை அபிவிருத்தி அடைந்த நகரங்களும் கிராமங்களும் சுரண்டுவதை வியப்புடன் நோக்க வேண்டியுள்ளது. அவ்வாறான கிராமங்கள், நகரங்கள் நவீனமயப்பட்டு அடிப்படைச் சுரண்டல்களை மேற்கொண்டு தாம் மேலதிகக் கட்டுமானங்களை மேற்கொண்டு மேலதிக வளர்ச்சிப் போக்கை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றுவரை மேற்கொண்டு வரும் மண் அகழ்வு ஆய்வு நிலைகளைக் கருத்தில் கொண்டு அதனை இரு பகுதிகளுக்குள் உள்ளடக்கி உற்று நோக்கமுடிகிறது.

1. சுனாமிக்கு முன் மண் அகழ்வு நிலை

ஒரு நாளைக்கு – 25 வண்டிகள் X 13 லோட்மண்
= 325 லோட் மண்

ஒரு கிழமையில் (6நாள்) – 6 நாட்கள் X 325 லோட் மண்
= 1950 லோட் மண்

ஒரு மாதத்தில் சராசரி 7800 லோட் மண் சூறையாடப்பட்டது.



1. சுனாமிக்குப் பின் மண் அகழ்வு நிலை

ஒரு நாளைக்கு – 40 வண்டிகள் X 13 லோட்மண்
= 520 லோட் மண்

ஒரு கிழமையில் (6நாள்) – 6 நாட்கள் X 520 லோட் மண்
= 3120 லோட் மண்

ஒரு மாதத்தில் – 4 கிழமை X 3120 லோட்மண்
= 12480 லோட் மண்

இப்போது ஒரு மாதத்தில் சராசரி 12480 லோட் மண் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எங்கள் காலடிகளில் நாங்களே எங்களது கல்லறைகளை உருவாக்கினோம். அதை உணர்ந்து கொண்ட பின்னும் புதை குழிகளின் ஆசை எங்களைப் பற்றிப் பிடித்து கல்லறைகளைப் பெருக்கிக் கொண்டே இருக்கிறது. மூக்கின் இரு துவாரங்களும் புதையுமட்டும் புதைகுழிகள் பெருகும் இக்காலத்தில் தானா நாம் இருந்து கொண்டிருக்கிறோம்? இருக்கப்போகிறோம்? என்ற வினாவை வினாவினால் வினாக்குறி மட்டுமே எஞ்சி நிற்கிறது என்பதில் ஐயமில்லை.

அம்பனூர் உறுமி

# வள்ளுவரின் உள்ளம்.......



வள்ளுவரின் உள்ளம் தலைசிறந்தது. வள்ளுவர் மனிதன் மனிதனாக வாழ வழி வகுத்த பெரியார் ஆவார். எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்ற நல் எண்ணமே அவர் குறள் முழுவதும் தலைதூக்கி நிற்கின்றது. எந்த அறத்தை எடுத்து விளக்கினாலும் அவ்வறத்தின் உட்பொருள் நாடு வாழ நாம் வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளது.

மறந்தும் பிறருக்குக் கேடு செய்யாது இருப்பதே அவர் வகுத்த அறநெறி ஆகும். அவருடைய அறிவும் அறமும் உண்மையும் பிற அனைத்தும் மற்றவர்களுக்கு மனத்தாலும் தீங்கு எண்ணாச் செம்மையான வாழ்விலே சென்று முடியும். மனிதன் மன் அழுக்கற்று மற்றவர் மேல் பொறாமை கொள்ளாது தேவைக்கு மேல் பேராசை கொள்ளாது அதன் வழித் தோன்றும் கோபம், கடுஞ்சொல் என்ற இவற்றையும் நீக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துகின்றன இதுவே அவர்தம் திருவுள்ளம்.

இதைப் போன்றுதான் வள்ளுவர் அறிவையும் விளக்குவார். அறிவென்பது ஏதோ தோல்வி வெற்றி பெற்றுச் சிறப்பது வள்ளுவர் கருத்தன்று. பிறர் துயரை தம் துயர் எனக் கருதி "உடுக்கை இழந்தவன் கை போல" தாமே வலிதாகச் சென்று மற்றவர் துன்பம் துடைப்பவர் அன்றோ அறிவுடையவராவார். அவரே எல்லாவற்றையும் உடையவராவார்.

வள்ளுவர் தவம் என்று கூறவது இக்கருத்துப் பற்றியதே ஆகும். தனக்கு வரும் துன்பத்தை தாங்குவதோடு தான் பிற உயிர்களுக்குத் தீங்கு இழையாது இருத்தலே தவம் என்பது அவர் தம் கொள்கையாகும். காடு திரிந்தும், தாழ் சடை வைத்தும், காவியுடுத்தும் வாழ்தலைத் தவம் என்று அவர் கருதவில்லை. உலகம் பழிக்கும் கொடுமைகளை அழிப்பதே அவர் கண்ட தவம். தனக்குத் தீங்கு இழைத்தவனுக்கும் அத்தீங்கினை அவனுக்கு இழைக்காமல் இருத்தலே அவர் உணர்ந்த அறிவாகும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக அவர் வாய்மைக்குத் தரும் விளக்கம் ஆகும். வாய்மை என்றால் கண்டதனைக் கண்டபடியே சொல்லுதல் ஆகும். வாய்மை என்றால் கண்டதனைக் கண்டபடியே சொல்லுதல் என அனைவரும் அறிவர். ஆனால் வள்ளுவர் மற்றவர்களுக்குத் தீங்கு இழைக்காத சொற்களையே வாய்மை என்கின்றார்.

## வாழ்க்கை முறை

மக்கள் வாழ்க்கை எக்காலத்திலும் ஒரே நிலையில் இருப்பதில்லை. காலம் செல்லச் செல்ல மாறிக் கொண்டே வரும். இந்த மாறுதலைத் தான் நாகரிக வளர்ச்சி என்பர். நாகரிகம் எப்போதும் முன்னோக்கியே செல்லும். ஒருபோதும் பின் நோக்கிப் போவதில்லை. வள்ளுவர் பண்டைய பழக்க வழக்கங்கள் அப்படியே நிலைத்திருக்க வேண்டும் என்று நினைப்பவர் அல்ல. காலத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே அவரது கருத்தாகும்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கைதான் சிறந்த கொள்கை என்று அவர் எண்ணுகிறார். அறத்துப் பாலில் உள்ள வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் உள்ளத்தைக் காணலாம். வாழ்க்கைத் துணை என்பது ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனும் என்ற முறை ஆகும். இதனை வள்ளவர் "வாழ்க்கைத் துணை நலம்" என்ற அதிகாரத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

- அன்பனி -

# திருப்தி

நடக்கின்றாள் இவள்
நிமிர்ந்த நன்நடை
நேர்கொண்ட பார்வையுடன்
நாகரீக உடை
பாவாடையுடன்
பவனி வருகின்றாள்.

கொள்ளிவாய் பேய் என
கொடும் சுடலைமாடனும்
பக்கத்தில் நிற்காமல் பறக்கவே

ஐய்யய்யோ – இது
பெண்ணா என சிலர்?
ஏளனச் சிரிப்பும்
கை கொட்டலும்



யார் என்ன சொன்னாலும்
பாரதி சொன்ன
புதுமைப் பெண்ணோ?

பெருமிதம் கொள்கின்றேன்
ஆணவத்தையும்
ஆணகத்தையும்
கேள்வி கேட்க
இப்போது
இவளொருத்தி போதும்!

– சி. நிலோஜன்
நாகர் கோயில்

# நிமலின் தேடல்

"எனக்கென்று உள்ளதனை எவரும் தடுக்கவும் முடியாது
எனக்கென்று இல்லாததனை எவரும் கெடுக்கவும் முடியாது"

"ஒன்றைப் பெற வேண்டுமானால் ஒன்றினை
இழந்தே ஆகவேண்டும்"



"இறைவனுக்காக மனிதன் படைத்தது திருவாசகம்
மனிதனுக்காக இறைவன் படைத்தது பகவத்கீதை
மனிதனுக்காக மனிதன் படைத்தது திருக்குறள்"

விநோகரன் விமல்ராஜ்
அம்பன்.

# ஐப்பானுக்கு போவோமா?

கல்வி, பொருளாதாரம், தொழிநுட்பம், மருத்துவம் எனும் பல துறையிலே



உலக நாடுகளிலே யப்பான் 100% இருப்பது எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஏனெனில் யப்பானும் எமது ஆசிய கண்டத்தைச் சேர்ந்த ஒரு நாடு.

அவர்களும் ஆசியர்கள் மட்டுமல்ல. அவர்களும் எம்மைப் போல அரிசியையே அதிகம் உணவுக்குப் பயன்படுத்து கின்றனர். நவீன விவசாய தொழிநுட்ப முறையில் அங்கு அதிகளவு நெற்பயிர்ச் செய்கை செய்யப்படுகின்றது.

உழைப்பை எந்த அளவுக்கு உயர்வாக மதிக்கின்றார்கள் என்பதனை ஜப்பானியரிடமிருந்து தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக ஜப்பானியர் ஒருவரின் தாயார் இறந்து விட்டால் இறந்தவருக்கான இறுதிச் சடங்கை உடனே முடித்து விட்டு மறுநாள் தொழில் செய்யும் இடத்திற்குச் சென்றுவிடுவார். எம்மைப் போல் 8 நாள், 16 நாள் அல்லது 31 நாள் கட்டாய் துக்கம் கொண்டாடுவதேயில்லை. ஜப்பானியரைப் பொறுத்த வரையில் கவனத்துடன் உழைப்பதே தாய், தந்தையருக்குச் செய்யும் பெரும் மரியாதை.

உழைப்பை விரும்பாது ஒருவன் இருந்தால் அவனையும் அவனது பெற்றோரையும் ்ப்பானிய சமூகம் தரக்குறைவாக கருதி ஒதுக்கிவைத்துவிடும்.

நேரத்தின் அருமையை உணர்ந்து கொண்டவர்கள் ஜப்பானியர். ஆகவே அங்கு எவ்வளவு தான் தேடிப்பார்த்தாலும் இரண்டு மூன்று பேர் நின்று கதைப்பது, பொழுதை கழிப்பது, சமா வைப்பது என்பன கிடையவே கிடையாது. குடும்பத்தவருடன் மட்டும் கதைத்து குடும்ப நலனுக்காக வாழ்வது தான் யப்பானிய பெண்களின் பொதுவான இயல்பு. எம்மைப் போல கதைக்க, பொழுதைக் கழிக்க யாராவது வந்து மாட்ட மாட்டார்களா என யாரும் வாழ்வதில்லை.

காதல் செய்வதிலும் ஜப்பானியர்கள் கெட்டிக்காரர்கள். காதல் திருமணமே அதிகளவில் ஜப்பானில் நடைபெறுகின்றது. பெற்றோர்களால் ஒழுங்குபடுத்தி திருமணம் செய்வது மிகவும் குறைவு. ஆனால் சிறப்பு என்னவென்றால் தமது காதலர்களுடன் கதைப்பதற்கோ! நேரத்தை செலவிடுவதற்கோ விரும்புவதில்லை. காதலிப்பதற்காக அல்லது காதலுக்காக நேரத்தை ஒருக்கும் பழக்கம் அவர்களிடம் இல்லை, அநேகமாக தாம் வேலை செய்யும் இடங்களில், தமக்கு மிகவும் அறிமுகமான இடங்களில் காதலர்களை தெரிவு செய்வதனால் காண்கிற போது செய்தியைப் பரிமாறிக் கொள்வார்கள். உணவு வேளையின் போது ஒன்றாகச் சாப்பிடுவார்கள்.

என்ன ஜப்பானுக்கு போவோமா? ஜப்பானுக்கு போகவேண்டும் என்றால் ஜப்பான் மொழி தெரிய வேண்டும் இப்போது ஒன்று இரண்டு பழகுவோம்!

| | |
|---|---|
| *1 - இச்சி (Icxi)* | *6 - ரோக்கு (Roku)* |
| *2 - நி (Ni)* | *7 - ஷிச்சி (Shichi)* |
| *3 - சான் (San)* | *8 - ஹச்சி (Hachi)* |
| *4 - ஷி (Shi)* | *9 - கு (Ku)* |
| *5 - கோ (Go)* | *10 - ஜீ (Ju)* |

- வே. கிரிஜா -
அம்பன்

# மீண்டும் ஒரு முனிவன்

நீண்ட நேரமாகத் தனிமையில் இருந்த எனக்கு அரவணைப்பான நிழலையும், பசுமைாக மேனியைத் தடவும் மெல்லிய ஓசையில்லா காற்றைக் கொடுத்தது அந்த நிழல் தரும் மரந்தான்.

வளரும் போது ஏற்பட்ட கோளாரோ? காற்றில் சரிக்கப்பட்டதோ? செல்வீச்சின் விளைவோ? அல்லது மனிதரைக் கண்டு பயமோ தெரியவில்லை. ஆனால் அது சரிந்திருந்ததைப் பார்த்து என்னுள்ளே இவ்வாறான பல கேள்விகள் தோன்றுவது வழமையே? நிமிர்ந்தே வாழவேண்டும் என விரும்பிய எனக்கு அந்த மரத்தின் சாடையான சரிவைத் தவிர மற்ற அனைத்தும் எனக்குப் பிடித்திருந்தது. ஏன் என் வாழ்வின் பல வரலாறுகள் அந்த மரத்துடன்தான் கழிந்தன. என் உலகம் அது. என் வாழ்வு அது. என் உறவு அது.

நீண்ட நாட்களாக அதோடு இணைந்து வாழ்ந்திருந்தாலும் எவ்வித சலிப்பும் ஏற்படவில்லை. ஆகவே அதனை எனது இறைவன் எனப் புரிந்து கொண்டேன். என் அன்னை யார் என நான் அடையாளம் காட்ட விரும்பவில்லை, ஏனெனில் ஆக்கிரமிப்பு போரும், விடுதலை போராட்ட போரும் எத்தனையோ பிள்ளைகளின் அன்னைமாரை பால் கொடுத்து கொண்டு இருக்கும் போதே பறித்துச் சென்றது. ஆகவே யார் எனது அன்னை என அடையாளம் கண்டு காட்ட விரும்பவில்லை. ஏனெனில் அவ்வாறு அடையாளம் கண்டு தனிமைப்படுத்துவது அன்னையில்லாப் பிள்ளைகளுக்கு மிகுந்த வேதகையாக இருக்கும். இதை எனக்கு சொல்லித் தந்து எனது குருவும், பேராசானும் அந்த மரமே!

என் அன்னையைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஏனெனில் அவள் மிகவும் நல்லவளாக அல்ல, நல்லது எது என்பதைப் புரிந்து கொள்ள ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும். ஆனபடியால் தான் அவளால் எனக்கு நல்லதொரு இடம், நல்லதொரு உலகம் அறிமுகம் செய்யப்பட்டது. இங்கு உலகம் என நான் சொல்வது அந்த மரமே!

நான் அதைச் சுற்றி விளையாடிய விளையாட்டு என்ன? பாடிய பாட்டு என்ன? பறந்த வேகம் என்ன? எனக்க ஒரு காதலும் உண்டு. ஆனால் அது இன்னுமோர் மரத்தில் வாழ்வதால் அதற்கு இங்கு வர விருப்பம் இல்லை. எனக்கு இந்த உலகை விட்டு விட சற்றேனும் எண்ணமில்லை. எனக்கு அவள் மீது காதலே தவிர அவள் உலகின் மீது அல்ல. எல்லோரும் என் காதலை கேலி செய்வதால் தான் நான் புரிந்து கொண்டேன். என் காதல் உண்மையானது என ஆனால் ஒன்று மட்டும் எனக்கு நன்றாகவும், தெளிவாகவும் புரிந்து கொண்டது எனக்கு இருக்கும் ஒரேயொரு உறவு இந்த மரந்தான். ஆனபடியால் நான் புத்தன் அல்ல. புத்தரைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவன். முற்றும் துறந்தான் புத்தன். ஆனால் அவன் சாகும் போது ஒரு கூட்டமே அணிவகுத்து நின்றது. குடும்பமாகின்றோம் பலர் கூடி கும்மாளம் அடிக்கின்றோம். ஆடி அடங்கும் போது கூடி இருந்தவர் எல்லாம் ஓடிப்போகின்றனர். அனாதையாக எறியப்படுகிறது பிணம் இருப்பினும் நான் புத்தனல்ல. புத்தனைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவன். முற்றும் துறந்தான் புத்தன். ஆனால் அவன் சாகும் பொது உரு கூட்டமே அணிவகுத்து நின்றது. குடும்பமாகின்றோம் பலர் கூடி கும்மாளம் அடிக்கின்றோம். ஆடி அடங்கும் போது கூடி இருந்தவர் எல்லாம்


ஓடிப்போகிறனர். அனாதையாக எறியப்படுகிறது பிணம். இருப்பினும் நான் புத்தனல்ல. புத்தனைப் புரிந்து கொள்ள கூடியவன்.

வாழ வழிகாட்டியது அந்த மரமே! ஆகவே அதுவே என் வழிகாட்டி! எனது தேசமும் அதுவே! எல்லோரையும் அன்போடும் கரிசனையுடனும் அரவணைப்பதால் அல்ல. தனியான தேசியம்! அதற்குள்ளும் இல்லை தனியான தேசியம்! ஆகவே என் தேச தலைவர், தேசிய தலைவர் எல்லாமே அந்த மரமே! இன்னுமொன்றை இங்கு முக்கியமாகச் சொல்ல வேண்டும் எங்களது தேசத்தில் சுடுகாடு என்று அடையாளம் காட்ட எதுவுமில்லை. மருந்திற்கு கூட மண்டையோடு இல்லை.

இப்போது எனக்கிருக்கும் அன்னை அந்த மரமே! அவள் அனுபவியாத துயரமே இல்லை. அதனாலும் அவர் அழுவதில்லை. அவளுடைய அழகிய உடுப்புக்களை சூரிய கதிர்களை வாரி அணைத்துக் கொள்ள நிலமீது வியாபித்து நிற்கும் கிளைகளை சில இயற்கை ஆக்கிரமிப்பாளர்கள் மொட்டைக் கத்தியால் வெட்டி வீழ்த்தும் போதும் கூட அழாத என் அன்னை ஒரே ஒரு நாள் அழுதாள். அவள் எந்த மதத்திற்கும் சேருமதியில்லை. ஆனால் இறைவனின் கரிசனையில் வளர்ந்தவள். தன்னுடைய குல தெய்வம் என்று அவளுக்கு ஒன்று இல்லை. ஆனால் தெய்வத்தின் அருளைப் பெற்றவள். இவ்வாறு எல்லா மதத்துக்கும் பொருவானவளாக வாழ்ந்து இறைவனின் சாட்சியாக இருந்த அவளின் கழுத்தில் யாரோ ஒரு மூடன் குலதெய்வத்தின் பெயரைச் சொல்லி பட்டுத்துணியைக் கட்டிவிட்டு பொட்டும் பூவையும் வைத்துவிட்டான். அன்று ஒப்பாரி வைத்தவள் தன்மீது பூசப்பட்ட அடையாளம் நீங்கும் வரை அழுதாள். அவளின் உணர்வில் நான் தெய்வத்தை கண்டேன். எனக்கு தெய்வம் அந்த மரமே!

இப்போது எனக்கு இருக்கின்ற ஒரே ஒரு கவலை அந்த மரமே! நிம்மதியற்ற நித்திரைக்கும், அமைதியற்ற உறக்கத்திற்கும் காரணமாக அமைகின்றது அந்த மரமே! ஏனெனில் சில கொடியவர்க்கு இந்த மரத்தின் மீது ஒரு கண். பெரும் காற்று வந்து சரிக்காதோ என்றனர். விறகு வெட்டுபவர் வெட்டினால் நல்ல பலகை என்கிறான், வியாபாரம் செய்பவர் பதுங்குழி அமைக்கலாம் என்கின்றனர், பாதுகாப்பு படையினர். கோயில் கட்டலாம் என்கிறார்கள் சமய பக்தர்கள். எனக்கு ஒரே கவலையும் வேதனையுமாக இருக்கிறது. அந்த மரத்திற்கு ஏதாவது ஆனால் நான் இல்லை என்றே ஆகிவிடும். அந்த மரம் இருக்கும் வரை நான் இருக்கப் போவதில்லை. ஆனால் நான் இருக்கும் வரை அந்த மரம் இருக்க வேண்டும்.

– ஏரோடி –
குடத்தனை



# நூலகங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

இன்று 21ம் நூற்றாண்டில் நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அந்த வகையில் இக்கல்வியின் தேவை என்பது உலகலாவிய ரீதியில் ஒவ்வொரு மனிதனது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. இவ்வுலகில் கற்காவிட்டால் தலை நிமிர்ந்து நிற்க இயலாது. "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" எனும் கூற்று மிகவும் சிறந்தது. அந்த வகையில் நூலகம் என்பது மிகவும் அவசியம்.



நூலகமானது பாடசாலையிலோ, கிராமத்திலோ, கல்வி கற்கும் தனியார் நிறுவனங்களிலோ அமைந்திருக்கும். இந் நூலகத்திலிருந்து மாணவர்களோ பெரியார்களோ பல புத்தகங்கள் வாசிப்பதனூடாக அல்லது பத்திரிகைகள் வாசிப்பதனூடாக பயனைப் பெறலாம்.

நூலகமானது மிகவும் அவசியமானது. பலவாறான புத்தகங்களை வாசித்து பயனை பெறலாம். இதன் மூலம் நல்ல நல்ல கருத்துக்களை அறியலாம். அதே நேரம் ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம். "வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்" என்பது முதுமொழி. நாம் வாசிப்பதனால் எம்மிடம் பேச்சுத் திறமைகள், கட்டுரை கடிதம் எழுதும் திறமைகள் என்பன வளரும். நாம் நூலகத்திலிருந்து பல கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள் என்பவற்றை வாசிப்பதன் மூலம் புதிய விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

பத்திரிகையும் மிகவும் சிறந்தது. அந்த வகையில் பத்திரிகை வாசிப்பதனால் பல செய்திகளை அறியலாம். சிறுவர் ஆக்கம் என்பவற்றை வாசித்து அறியாததை அறிந்து கொள்ளலாம். கை வர்ணங்கள், வினாவிடை என்பவற்றையும் பத்திரிகை மூலமாக எமது திறனை வளர்த்துக் கொள்ளலாம். அத்துடன் பத்திரிகையின் ஊடாக எமது திறமைகளை வெளிக்காட்டலாம். உதாரணமாக கட்டுரை, கவிதை, சிறுகதை என்பவற்றை எழுதி அனுப்பலாம். பலவாறான தகவல்களைப் பெறலாம். குறுக் கெழுத்துப் போட்டி என்பவற்றில் பங்கு பற்றி பத்திரிகை மூலமாக பரிசில்கள் பெறலாம். இதன் மூலம் நூலகம் ஆனது பயன்படுகின்றது.



பயிற்சி புத்தகங்கள் என்பவற்றை நாம் நூலகத்திலிருந்து பெற்று அதனை கற்று அறிவை வளர்க்கலாம். ஆங்கிலம் கற்பதற்கு ஆங்கில சொற்கள் தெரியாமைக்கு அகராதியை நூலகத்திலிருந்து பெற்று தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் ஆங்கிலத்தை வளர்த்துக் கொள்ளலாம்.

கட்டுரை, கடித புத்தகங்களை எடுத்து வாசித்து கட்டுரை, கடிதம் போன்றன எவ்வாறு அமைய வேண்டும் எவ்வாறு எழுத வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். அத்துடன் தமிழ் மொழியையும் வளர்த்துக் கொள்ளலாம்.எனவே நூலகம் என்பது ஒரு மனிதனது வாழ்க்கைக்கு அவசியம். ஆகவே நூலகத்தின் மூலம் எமது அறிவை மென்மேலும் வளர்த்து கொள்ளலாம்.

பா. அகலிகா (தரம் - 11)

# அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை

## கிறிஸ்த்து நற்தூது பணியகத்தின் இயேசு பிறப்பு பண்டிகை நிகழ்வுகள்

02.12.2007 - வருகையின் 1ம் ஞாயிறு
வழிபாடு க.பொ.த சா/தர
10.00 a.m மாணவர்களுக்கான ஆசீர்வாத வழிபாடும், பிரிவு உபசாரமும்.

07.12.2007 - பாலர் ஒளிவிழா
(முன்பள்ளி நிகழ்வு)
2.30 p.m முதன்மை விருந்தினர்
அருட் தந்தை N. நிலன் நிசாந்தன் பங்குத் தந்தை மணல்காடு

திரு. M. பத்மராஜா - MA
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் மருதங்கேணி.

திரு. N. தர்மகுலசிங்கம்
கிராமசேவை
உத்தியோகத்தர் - குடத்தனை.

09.12.2007 - வருகையின் 2ம் ஞாயிறு
வழிபாடு
08.00 a.m ஒளி வழிபாடு - உயர்தர மாணவர்கள் ஒரு நாள் பயிற்சி பாசறை

15.12.2007 - வாலிபர் பாசறை நிகழ்வு
09.00 a.m காரைநகர்.

16.12.2007 - வருகையின் 3ம் ஞாயிறு
வழிபாடு
08.00 a.m மலர் வழிபாடு - தரம் 10 மாணவர்கள்

21.12.2007 - நட்புறவு ஒளிவிழா வழிபாடு
02.00 p.m வரணி

22.12.2007 - ஒருமைப்பாட்டு ஒளிவிழா
வழிபாடு
02.00 p.m மாளிகைத் திடல் முகாம்

23.12.2007 - வருகையின் 4ம் ஞாயிறு
வழிபாடு
08.00 a.m பண்பாட்டு வழிபாடு - தரம் 9 மாணவர்கள்

24.12.2007 - ஒளிவிழா கலை நிகழ்வு
02.00 p.m கலப்பை நற்பணி மன்றம்

திரு. S. சிறிஸ்கந்தராஜா
உதவி அரசாங்க அதிபர்

திரு. T. கணேசமூர்த்தி
நிர்வாக உத்தியோகத்தர்

25.12.2007 - இயேசு பிறப்பு வழிபாடு
08.00 a.m


26.12.2007 - சுனாமி பேரனர்த்த
09.00 a.m ஆற்றுப்படுத்தல் வழிபாடு
அருட்பணி. A. ஜெயகுமாரன்

27.12.2007 - அமைதியான செய்தி பகிர்வு
02.00 p.m மந்திகை வைத்தியசாலை

29.12.2007 - ஒருமைப்பாட்டு ஒன்று கூடல்
10.00 a.m பருத்தித்துறை

31.12.2007 - அமைதியும் தியானமும்
10.00 a.m

01.01.2008 - புத்தாண்டு சிறப்பு வழிபாடு
08.00 a.m



# ஒளி



இந்த நாள் வரை நாங்கள்
எங்கு இருப்பதாக
எண்ணிக்கொண்டிருக்கின்றோம்?
தேவ ஒளியில் தானே இருக்கின்றோம்
வெளிச்சம் என்றும், பிரகாசம் என்றும்,
பரிசுத்தம் என்றும் பாரினில்
எண்திசையும் தேடத் தேவையில்லை
மனிதத்தை பிரசவிக்கச் செய்யும் போது
ஒளியைப் புரைச் செய்கிறோம்
ஆனால் இன்று .........
ஒளியில் இருந்து கொண்டு
இருட்டைப் பிரச்சாரம் செய்கிறோம்.
சுயநலவாதக் கோட்பாட்டில்
சர்வதிகார, பயங்கரவாத, தீவிரவாத
கொள்கைகளை அடியொற்றி
மட்டமான நடிவடிக்கைகளை
சக்தியற்ற சடங்குகள் மூலமும்
சரித்திரத்தைச் சாகடிக்கும்
மூடநம்பிக்கைகள் மூலமும்
வெளிச்சம் என்று எண்ணி
ஆண்டவனின் பெயர்களில்
தீபங்களாக ஏற்றுகிறோம்.
மதங்களை நேசிக்கிறோம் என்று கூறி
மனிதர்களை மறந்து விடுகிறோம்
பாவம் நாங்கள் ...............
பரிசுத்த ஒளியை நெருங்குவதாக
எண்ணி ......... எங்களை நாங்களே
ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

**கீர்த்தனா. கந்தசுபேசன்**
**-அம்பன்-**




# MERRY CHRISTMAS
## and
## HAPPY NEW YEAR

**Love one another,**
**Just as**
**I Love You**
**- Jesus-**

**My thoughts are with you, May Lord Jesus bless and keep you**

**KALAPPAI CHILD MISSION**
**CHURCH OF THE AMERICAN CEYLON MISSION**
**KUDATHTHANAI . NP**
**SRI LANKA.**

**Print By:** நூபன் பிறிண்டேர்ஸ்.
முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. *T.P 0776 624386*